23
3-56

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6. | சேலம் 28—9—56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 12

1 OCT 1956
MADRAS

## பசிக்குப் புசித்திட பாலகனைக் கொடு—வரிப்புலி.

திராவிடத்தின் வளத்தை, ஏக இந்திய வாதத்தின் பெயரால் எத்தர்கள் சுரண்டுகின்றனர். "பாரத மாதாவின் புத்திர சிகாமணிகள் நாமெல்லோரும்" என்று பஜனை பண்ணிக்கொண்டே தென்னாட்டை மெலிய வைத்து வடநாடு வலுக்கிறது பலமான மத்திய அரசாங்கம் தேவையென்று, வளமான வரியனைத்தும் இங்கிருந்து வாரிச் செல்லுகின்றனர் வரிப்புலி நெஞ்சம் வாய்ந்தவடவர்கள்.

அண்மையில் சென்னை கூட்டமொன்றிலே அறிஞர் அண்ணா பேசுகையிலே கூறினர்கள்:

"தன் அருமைப் பாலகனை வீட்டில் தூங்கவைத்துவிட்டு தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்ததாய், திடீரெனப் புறக்கடையிலே, "ஓநாய் ஓநாய்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். அக்கம்பக்கத்திலிருப்பவர்களின் துணைகொண்டு ஓநாயை விரட்டிவிட்டாள். குழதையைப் பார்க்க உள்ளே சென்றாள்.

அங்கே ஒரு புலி வாட்டசாட்டமாக உட்கார்ந்திருக்கக் கண்டாள் அந்தத்தாய், "ஐயோ, புலி வந்திருக்கிறதே!" என்று அலறினாளாம். அப்போது "ஓநாய் ஓட உதவி செய்யவந்த உபகாரியாயிற்றே நான்; என்னைக்கண்டு ஏன் நடுங்குகிறாய்? நான் ஓநாயை விரட்டாதிருந்தால் உன் குழந்தை உயிர் பிழைத்திருக்கமுடியாதல்லவா? ஆதலாலே, நான் இங்கேயே இருக்கிறேன்; உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; எனக்குப் பசிக்கும்போது மட்டும் உன்னுடைய பாலகனைக் கொடுத்தால் போதும்'— என்று புலி கேட்டால், அது எவ்வளவு அக்கிரமமானதோ —அவ்விதம் கேட்கும் புலி ஓநாயைவிட எவ்வளவு கடூர நெஞ்சம் படைத்ததோ அதைப் போலத்தான், இன்று வடநாட்டினர் 'வெள்ளையர்களை விரட்ட நாங்கள் உதவி செய்யவில்லையா? ஆதலாலே திராவிடததின் வளப்பத்தை எங்கள் வாழ்விற்குப் பயன் படுத்திக்கொள்ள உரிமையிருந்தால் போதும்'




[10-ம் பக்கம் பார்க்க]

# அரசாங்கப் புள்ளி விபர அலங்கோலம்!

திறமையான நிர்வாகம்—நேர்மையான ஆட்சி—நாணயமுள்ள ஆட்சியாளர்—இவைகளைக் காணவேண்டுமா? உடனே கட்டிச்சோறு கட்டிக்கொண்டு தாமதிக்காமல் புறப்படுக. சென்னை என்ற ஒரு பெருநகரம் வங்காள விரிகுடாவின் கரையிலே உள்ளதாம். அங்குள்ள கலங்கரை விளக்கைக் கடந்து சென்றால் ஒரு கோட்டை உள்ளதாம், கோட்டைக்குள் நேராக நுழைந்து செல், யாரும் உன்னைத் தடுக்கமாட்டார்கள். நாய்கூட நுழையலாமாம். காரில் வரும் காககாய்களுக்கோ அளவே இல்லையாம்! அங்கே உன வரிப்பணம் சிந்திக்கிடக்கும் அலங்கோலத்தைக் கண்முன்னாக் காணலாம். நெஞ்சு சோர்ந்து, குருதி வற்றி, ஊன் வாடிச் சாகலாம். கவலைப்படமாட்டார் அங்குள்ள சீமான்கள்.

இது என் கற்பனைதான். என்றாலும் உண்மை. அரசாங்கத்தாரின் வெளியீடுகளே அவர்தம் அலங்கோல ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அவற்றைப் படிக்கும் சிந்தனையுள்ள எவர்க்கும் சென்னை அரசாங்கக் காரியாலத்தைப் பற்றி எனக்குத் தோன்றிய இத்தகைய எண்ணம்தான் தோன்றமுடியும். சிந்திப்பதே பாவம் என்று நினைப்போரும், அடிமை வாழ்விலேயே ஊறி, மணம் மிக்க உரிமைப் பூங்காவிலே உலவினால் எங்கே மரணம் வந்தெய்திடுமோ என்றஞ்சி, அச்சாக்கடையே சுகமென்றிருக்கும் புழுக்களும் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

இந்த அலங்கோலம் பக்கிங்காம் கால்வாய்க்கும் அந்தப் பக்கத்திலேயே இருந்திருக்கக்கூடாதா? உள்நாட்டிலும் பரவ ஆரம்பித்து விட்டதுதான் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. ஏதோ வரியைக் கொடுத்து விட்டோம், கண் மறைவாக என்னவேண்டுமானாலும் நடந்து தொலைக்கட்டும் என்று அமைதியாக இருக்க விடமாட்டார்கள் போலிருக்கிறதே! விளம்பரம் என்ற பெயரால் நமது வயிற்றெரிச்சலையல்லவா கிளப்பி விடுகிறார்கள்!

சென்னை அரசாங்கச் செய்தித் துறையைக் காங்கிரஸ் பிரசார அமைப்பாக மாற்றினர், ஆறுதலடையவில்லை அரசாங்கம். குசலகுமாரியின் நெளிவிலேகூட அவர்களுக்குக் குதூகலம் பிறக்கவில்லை! முதல்திட்ட சாதனைகளை ஒலிப்பதிவு செய்து மூலை முடுக்கெல்லாம் ஒப்பாரி வைக்க அனுப்பினால் போதும் என அமைதியுறும் மனமும் இல்லை. மாவட்டத்திற்கொரு டமாரத்தைப் போட்டு முழக்குவதும் போதாதாம். அமைச்சர்களே தாம் செல்கின்ற இடமெல்லாம் தம நாவே கோலாக, வாயே பறையாகக் கொட்டி முழக்குகின்றனர். சிரக்கும்பிடுபோட்டு சிரத்தையோடு பஜனையைக் கேட்கவரும் ஒன்றிரண்டு சீமான்களாவது அங்கங்கே உண்டல்லவா? ஆனால், அரசாங்கம் இப்பொழுது ஓயாமல் கூக்குரலிடத் தொடங்கியிருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றும் தெளிவாக, அது மந்தம் என்பதைத்தான் திரும்பத்திரும்ப வற்புறுத்துவதாக உள்ளது. 2000 கோடி ரூபாய்களை கேட்டு வாங்கேன் என்றால், ஐயோ இரண்டாயிரம் கோடியா என்று வாயைப் பிளக்கிறது! பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று விழிக்கிறது! திட்டம் ஒன்று தருகிறாயா என்று நம்மையே திருப்பிக்கேட்கிறது! ஐயோ, இது மந்தம்கூட அல்ல போலிருக்கிறதே! வேறு என்னவோ...சரியாகத் தெரியவில்லை!

**“இளந்தமிழன்”**

இதை மேலும் நன்கு மெய்ப்பிக்கும் ஒரு சுவையான உண்மையைக் கூறுகிறேன், கேளுங்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம மாநில அரசாங்கம் தனக்கு வேண்டுமென்று கேட்ட பக்கு 400 கோடி ரூபாய் என்றும், ஆனால், பெற்றுள்ளது 170 கோடி ரூபாய் என்றும் பல செய்தி ஏடுகள் ஒருமுகமாகக் கூறுகின்றன. மாநில மக்கள் தொகைக்கு ஏற்பப் பார்த்தால் குறைந்தது 400 கோடியாவது நமக்கு வந்துதான் ஆகவேண்டும். ஆனால் அமைச்சர், திரு. சி சுப்ரமணியம் அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்:

"இம்மாநிலத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப, இம்மாநிலத்தின் திட்டங்கள் முழுவதற்குமாகச் சேர்த்து 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டது, திட்டக்குழு இன்னும் அதற்கு இசையவில்லை—" (இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய பொதுநோக்கம்—பக்கம்-5)

இந்த நூல், இந்த ஆண்டில்தான் வெளிவந்துள்ளது. 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டதாகச் சொல்லுகிறார்! அப்படியானால் 400 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருப்பதாக மக்களிடம் சொல்லியது என்ன ஆயிற்று? அசட்டுப் பிள்ளைதான் என்பது அப்பட்டமாகத் தெரிகிறதல்லவா? இதோடு முடிந்து விடவில்லை கதை, ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை என்ற ஒரு சிறு நூலை 1955-ம், ஆண்டிலே வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு தொடர்:

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிறது. அதன்படி ரூ 200 கோடி சென்னை ராஜ்யத்திற்குச் செலவு செய்யப் படலாம்” (ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை—பக்கம்-2) நமது மாநில மன்றம் 200 கோடி ரூபாயைத்தான் எதிர்பார்த்துள்ளது! 200 கோடியை எதிர்பார்த்து, எதற்கும் 20 கோடி சேர்த்துக் கேட்கலாம் எனத் தயங்கியவாறே 220 கோடி ரூபாயைக் கேட்டு, மக்களிடம் தலைதப்ப வேண்டுமே என்பதற்காக 400 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம் என மார்தட்டியிருக்கிறது! எப்படி நம் பிள்ளையின் சூரத்தனம்!

நம திட்டம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துள்ள நிலையைப் பார்த்தால் இன்னும் அதன் திறமை புலப்படும். ‘முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்’ என்னும் தலைப்பில், முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தபிறகு ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் இறுதியிலே, இரண்டாவது திட்டத்தில், நம மாநிலத்தில்

[9-ம் பக்கம் பார்க்க]

மைத்ரே:- அப்படியானால், மன்னன் நந்திவர்மனின் பாராட்டினை ஓவியம் பெறப் போவதில்லையா?

சந்திர:- ஏன் பெறாது? செங்கரும்பை விரும்பாத யானையுண்டோ?

மைத்ரே:- நாம் சந்திக்கும் நேரத்தில், யானைக்கு மதம் பிடித்தால்........?

சந்திர:- நான் அடக்குகிறேன். மைத்ரேயரே! மன்னனின் பாராட்டைப் பெறவேண்டும் இந்த மகத்தான சித்திரம். அவ்வளவுதானே? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

மைத்ரே:- அரசவைக்கு நான் புதியவன்.

சந்திர:- அச்சம் வேண்டாம். அருகிலேயே நான் இருப்பேன்.

மைத்ரே:- வெறும் நாவோடு சந்தைக்குப் போய், வெள்ளிக் கோலால் அடிபட்ட கதையாகிவிடக் கூடாதே!

வித்யா:- கலைவளர்க்கும் பல்லவ மன்னன் சபையிலே, மைத்ரேயரின் ஓவியத்திற்கு மதிப்பில்லையென்றால், கலைமகளின் கண்களுக்கு ஒளியில்லையென்றுதான் பொருள்.

சந்திர:- பொன்னான பேச்சு!

மைத்ரே:- பிறகென்ன; செம்பு பித்தளையாகவா இருக்கும் என் சிஷ்யையின் வாய்மொழி?

(அவளைத் தட்டிக் கொடுக்கிறார் மைத்ரேயர். சிரிக்கின்றனர்)

## காட்சி 2.

(காஞ்சியின் தெருவொன்று. பச்சை, ஒரு வாழைப்பழத்தை உரித்துத் தின்றவண்ணம் வருகிறான். எதிரே உச்சிக்குடுமியைத் தட்டி முடிந்தவண்ணம் மைத்ரேயன் வருகிறான்)

மைத்:- என்ன பச்சை! வாழைப்பழம் தின்கிறாயா?

பச்:- பச்சை வாழைப்பழமா? அருமையான தேன்கதலி சுவாமி! ஒமக்கு வேணுமா? வாங்கிட்டு வர்றேன். பக்கத்து தெருக்கோயில்லேதான் பிரசாதப் பட்டுவாடா நடக்குது.

மைத்:- (சிரித்து) பச்சை! வாழைப்பழம் ஒரு ஏழைப் பழமப்பா! உனக்குச் சரிதான்; எனக்குப் பிடிக்காது.

பச்:- அப்படியானால், நீங்க சாப்பிடறது?

மைத்:- பலகாரம்.

பச்:- பலகாரம்! பழ ஆகாரம்! இந்தப் பழ ஆகாரந்தான் நாளடைவிலே பலகாரம் என்பதாகமருவிற்று. ரெண்டும் ஒண்ணுதான் சுவாமி!

மைத்:- நீயும் கெட்டாய். உன் தமிழும் கெட்டது, போ! ஏண்டா! ஏழையும் பிரபுவும் ஒன்றாக முடியுமா?

பச்:- ஏனுங்க? கண்ணு, காது, காலு, கையி எல்லாம் ஒண்ணுதானுங்களே?

மைத்:- உணவு?

பச்:- மனுஷனுங்க திங்கறதைத்தான் ஏழைங்க திங்கறாங்க. பிரபுவுங்க?......

மைத்:- தேவர்களின் உணவைச் சாப்பிடுகிறார்கள். தேவர்கள் பாஷையிலேயே பேசுகிறார்கள்!

பச்:- தேவர் உணவுன்னு சொன்னீங்க! பொங்கல், புளியோதரை, தேங்கா, பழம் அது இது சரிதான்! அதென்னங்க தேவபாஷை?

மைத்:- மண்டு! அதுதாண்டா சம்ஸ்கிருதம்! பவித்ரமான பாஷை. மகான்கள்—பக்தர்கள்—உயர்ந்தவர்கள் போற்றிப் பாதுகாக்கும் மேலான பொக்கிஷம்!

பச்:- தமிழுங்க?

மைத்:- தமிழ்! மிகத் தாழ்ந்தது. பாமர மக்களின் பாஷை! பகவானுக்குப் புரியாதது!

பச்:- கெடையாது, நீங்க சொல்றது தப்பு. (தொலைவில் நோக்கி) சுவாமி! தோ; புலவர் பெருந்தேவனார் வர்றார். கொஞ்சம் இருங்க. அவருகிட்டையே கேட்டுடுவோம்.

மைத்:- (பார்த்து அஞ்சி) ஐயயோ! பச்சை! வேண்டாம்! விஷப் பரீட்சை! (பணம் எடுத்துக் கொடுத்து) இந்தா, இதை வைத்துக்கொள். நாம் பேசியதை அவரிடம் சொல்லிவிடாதே!

பச்:- ஏனுங்க சுவாமி?

மைத்:- பெரியவர்களிடம் விவாதம் பேசக் கூடாதடா! நான் வருகிறேன். சாயுங்காலம் வித்யாவதியின் வீட்டுக்கு வருகிறாயா?

பச்:- வர்றேனுங்க.

(மைத்ரேயன் ஒரு பக்கம் போக, மறு பக்கம் பெருந்தேவனார் வருகிறார்)

(வளரும்)




## காட்சி 1.

(வித்யாவதி வீடு. பாடியவண்ணம் மாலை தொடுக்கிறாள் வித்யாவதி. அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறாள். பின்னர் கையில் வைத்து ஆளை எதிர்பார்க்கிறாள்; சந்திரவர்மன் வருகிறான். ஆசையோடுசென்று மாலையைக் கழுத்தில் அணிவித்து, திருஷ்டி கழிக்கிறாள்)

சந்திர:- (தழுவி) இன்பம்! வித்யாவதி! இன்பத்தின் எழில்வடிவம்! இசைக் கலையின் சுவைக் கடல்! சௌந்தரியத்தின் சிகரம்! காதலின் கலையமுது! உனக்கல்லவோ கண்ணேறு கழிக்க வேண்டும்!

(திருஷ்டி கழிக்கிறான்: கைகளை பற்றிக்கொள்கிறான்)

வித்யா:- எனக்கின்பம் தருபவர் நீங்கள், பெறுபவள் நான்!

சந்திர:- தருவதும் பெறுவதுமான காதற் கலையிலே, மணிமுடி புனைந்த மகாராணி நீ!

வித்யா:- சுவாமி! தகுதியற்ற தங்கள் அடிமைக்கு, எவ்வளவு மிகுதியான பாராட்டுகள்! கொஞ்சமும் பொருந்தாது சுவாமி!

சந்திர:- வயிரத்தின் தகுதி, அதனை வைத்திருப்பவர்க்கல்லவோ தெரியும்! வித்யாவதி! அரச குடும்பத்திலே பிறந்தும் அரியாசனம்கிட்டாதவன். நல்லதமிழறிந்தும் நாடோடியாகச் சுற்றுபவன். நான் கற்றுமறந்த கல்வியை, உன் காதலின் பேரொளி பெற்றுத் தந்ததடி எனக்கு!

வித்யா:- அப்படி என்னிடம் என்ன சுவாமி இருக்கிறது?

சந்திர:- மனிதன் விரும்புகின்ற கலையின்பம் அத்தனையும் மண்டிக்கிடக்கிறதே, இந்தத் தங்கத் திருமேனியில்!

வித்யா:- உண்மைதானா சுவாமி?

சந்திர:- காற்று வீசுவதும், கதிரவன் காய்வதும் உண்மைதானே?

வித்யா:- (அணைத்து, அவன் உதடுகளை கிள்ளி) இந்தச் சுவையான இன்பம்போல, அவை நிலையான உண்மையாயிற்றே!

சந்திர:- ஒப்புக்கொள்ளவேண்டும் அப்படி. இதுதான் நாணயம். (அணைத்தல்)

(கையிலே ஓவியத்தோடு, பின்புறம் வந்து நிற்கிறான் மைத்ரேயன்)

மைத்ரே:- கொஞ்சம் திரும்பவேண்டும் இப்படி. இதுதான் ஓவியம்!

சந்திர:- (விலகி) ஓ! மைத்ரேயரா? வாரும். முடித்துவிட்டீரா ஓவியத்தை?

மைத்ரே:- அசந்தர்ப்பம் ஏதுமில்லையென்று நினைக்கிறேன். அப்படியிருந்தால்... மன்னிக்க வேண்டும்.

சந்திர:- (ஓவியத்தை வாங்கிப் பார்த்து) முடியாது. மன்னிக்கும்படியான காரியத்தையா நீர் செய்திருக்கிறீர்? வித்யாவதி! பார்த்தாயா ஓவியத்தை?

வித்யா:- (பார்த்து) அற்புதமான சித்திரம்! பாடுகின்ற நீங்கள், அபிநயம்பிடித்து ஆடுகின்ற நான்! அடடா!

மைத்ரே:- ஆமாம், தேவலோகத்து சித்திரசேனனும் ஊர்வசியும்போல!

சந்திர:- அன்பின் மிகுதியால் நம்மைச் சேர்த்துவைத்த மைத்ரேயர்; கலையின் திறத்தால் நம்மை அமரக் காதலராக்கி விட்டார்! வித்யாவதி! எப்படி இவரை மன்னிப்பது? என் கையிலே ஆட்சி இருந்தால், பொற்காசுகளை வள்ளம் வள்ளமாக இவரது தலையிலே கொட்டி, அந்தக் குவியலிலே திணறடிப்பேன் இவரை!

ப. கண்ணன்

## எத்ரோல்



லஞ்சம் கொடுக்காமல் தேர்தலில் ஜெயிக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

—ராஜாஜி

குடியரசு நாட்டிலே, கொல்லை வழியிலே புகுந்து, அதிகாரத்தைக் கைப்பற்றுபவன் யோக்கியனு என்று நாம் கேட்கிறோம்.

*　　*　　*

கோர்ட் செய்திகளைப் படிக்கும்போது, வக்கீல் வேலை பார்க்கலாமா என்ற ஆசை ஏற்படுகிறது.

—மந்திரி. சுப்ரமணியம்

நாட்டு நிலையைப் பார்க்கும்போது, தேர்தலில் வெலித்து மந்திரியாக வருவது முடியாது போலவும் தெரிகிறது, இல்லையா?

*　　*　　*

ஈ. வே ரா. பெரியாருக்கு குன்றக்குடி மடாதிபதி பொன்னுடை போர்த்தினர்.

—செய்தி.

காமராஜர் போர்த்துவதில் உள்ள ஆபத்தைக் காட்டிலும், இது சற்று குறைவுதான்.

*　　*　　*

வ. உ. சி. கப்பல் ஏலம் போயிற்று

—மந்திரி, சுப்ரமணியம்.

ஆனாலும், மந்திரிகளின் மானம் போகவில்லை.

*　　*　　*

இந்தி தேசிய மொழியல்ல; பொது மொழியே!

—கவனர். ஸ்ரீ பிரகாசா.

உண்மை. தேசத்துக்கு உரியதுவே தேசிய மொழி. இந்தி நம் தேசத்துக்கு உரியதல்லவே!

*　　*　　*

ஓடும் ரயிலுக்கு தீ விபத்து. 5 பெட்டிகள் பாழாயின.

—செய்தி

பார்ப்பனர்கள் இருந்திருப்பார்கள். அவாளின் வலது கையில்தான் அக்கினி இருப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறதே!

# டாக்டர் மதுரம்.

தமிழ்ப் பெருமக்களுக்கு டாக்டர் மதுரம் என்றால், திருச்சிராப்பள்ளி நினைவு வரும். அடுத்து அவர் நிர்மாணித்த குருமருந்துசாலை நினைவுக்கு வரும், அடுத்து வருவன. புகழ்பெற்ற குரு பற்பொடி, குருதைலம் போன்றவை.

இன்று, குருமருந்துசாலை உரிமையாளரும், டெல்லி சட்டசபை உறுப்பினருமான டாக்டர் பால் மதுரம் அவர்களின் தந்தையாரே இவர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் 29-6-1877. திருச்சி மாவட்டத்திலுள்ள இருங்களூர் கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் டாக்டர் சாமுவேல் மதுரம்,

இவருடைய குடும்பமும், குடும்பத்தைச் சார்ந்தவர்களும் மூன்று, நான்கு தலைமுறைகளாக தமிழ், ஆங்கில வைத்திய முறைகளில் பட்டங்கள் பெற்றுப் பணியாற்றியவர்கள் ஆவார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாசரேத் இவர்களுடைய சொந்த ஊர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் அமெரிக்கா, இலண்டன் கெமிகல் ஆராய்ச்சி நிலையத்தில் 1907 முதல் 1915 வரை இந்தியாவின் பிரதிநிதியாக இருந்தார். 9 ஆண்டுகள் திருச்சி நகரசபை உறுப்பினராகவும், 9 ஆண்டுகள் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தார். திருச்சி மாவட்ட நீதிக்கட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். கல்லூரி நிருவாகக்குழுக்களிலும், பொது நிலையங்களிலும் ஆதரவாளராக இருந்திருக்கிறார். பல நிலையங்களுக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் நன்கொடையாக வழங்கி இருக்கிறார்.

அண்மையில், திருச்சியில் இவரது உருவச்சிலையை சென்னை முதலமைச்சர் கனம் காமராசர் திறந்துவைத்தார். டாக்டர் மதுரத்தின் மருத்துவப் பணியின் சிறப்பு குறித்துப்பல அறிஞர்கள் பாராட்டினர். ஆங்கில வைத்திய முறைகற்று, தமிழ்முறை தேர்ந்து, இரண்டினையும் கலந்து புதுமுறையில் தயாரிக்கப்பட்ட எளிய விலையுள்ள குரு மருந்துகள் மிகப் பயனுள்ளவை என்பது அனுபவஉண்மை. டாக்டர் மதுரம் அவர்களின் இக்கூட்டு மருத்துவப்பணியினை நாம் மனமுவந்து பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்!

திறப்பு விழாக் கூட்டத்திலே தி. க. பொதுச் செயலாளர் தோழர், எஸ். குருசாமி "நாங்கள் காங்கிரசில் சேரப் போகிறோம்" என்றாராம், காமராசர் முன்பு. சிரித்தாராம் அவர்.

மேலைநாட்டு மருத்துவமும் தமிழ்நாட்டு மருத்துவமும் இணைந்ததால், மருத்துவத் துறையிலே டாக்டர் மதுரம் பலன்காண முடிந்தது. வடநாட்டு அரசியல் அடிமைகளையும், தென்னாட்டு விடுதலை வீரர்களையும் இணைத்து, குத்தூசி குருசாமியார் அரசியல் துறையிலே என்ன பலன் காணப் போகிறாரோ! பார்ப்போம். ØØ

## எனக்கு நம்பிக்கையில்லை!

நான் தனித்தமிழ்நாடு (மத்திய ஆட்சி, ஆதிக்கம் இல்லாத தமிழ் நாடு) கேட்கிறேன். அவர் (காமராசர்) அது கூடாது என்கிறார். நான் கேட்கும் காரணம் தனித்தமிழ்நாடு (பூரண சுயேச்சை உரிமையுள்ள தமிழ்நாடு) இல்லாவிட்டால் தமிழர் வாழ்வு சிதைந்து போகும், தமிழ்நாடு சரண்டைப்பட்டுவிடும் எனகிறேன்.

அவர், அதுகூடாது என்பதற்குச் சொல்லும் காரணம்: தமிழர் சிதைய மாட்டார்கள், சுரண்டப்பட மாட்டாது. நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார். இவர் இப்படிச் சொல்லுவதில், அதாவது "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லுவதில் எனக்கு நம்பிக்கையில்லை,

—பெரியார் ஈ. வே. ரா.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 28—9—56 | இதழ் 12

## தீண்டாமை ஒழிக்க.

———)-(———

பெரியார் விநோபா கூறுகின்றார்:

"சூரியனது கிரணங்கள் ஒவ்வொரு வீட்டிலும் பிரவேசிக்கின்றன. அரிசனங்கள், சாதி இந்துக்கள், முசல்மான்கள் அனைவரது வீட்டிலும் சூரியனுக்கு எவ்வித வேற்றுமையும் கிடையாது. இவ்விதப் பாகுபாடுகளைப் பாராட்டுவது தவறாகும். எங்கு எல்லோரும் எவ்விதத் தடையுமின்றி போவதற்கு அனுமதியிருக்கிறதோ, அந்த இடந்தான் ஆண்டவன் வாசம் செய்யும் இடமாகும்."

14-9-56-ல் பெத்தநாய்க்கன் பாளையத்தில் இவ்வாறு பேசிய திரு. விநோபாபாவே, சாதி இந்துக்களைப் பார்த்து மேலும் கூறுகின்றார்:

"நாய், பூனை, எலி போன்ற பிராணிகளை வீட்டில் வைத்துக்கொள்ளும் மேல் சாதிக்காரர்கள், அரிசனங்களைக் கண்டுமட்டும் ஏன் அருவருக்க வேண்டும்? கிராமத்தில் தங்களோடு அவர்களை வாழவிடுவதில் என்ன தவறு? ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தீண்டத்தகாதவன் என்று வெறுப்பது பெருங்குற்றம். சாதி, குலம், பிறப்பு என்ற மாயச்சுழலில் சிக்கிச் சீரழியாதீர். இழிந்த எண்ணத்தை இன்றோடு விட்டு விடுங்கள். அரிசனங்கள் ஆட்டுச் சாதியாகவும், மேல் சாதிக்காரர் ஓநாய்ச் சாதியாகவுமா வாழுவது? மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் பயமுறுத்தவோ, பயப்படவோ கூடாது."

இப்படிக் கூறிய விநோபா வாய்ச்சொல்லோடு நிற்கவில்லை. ஆதித் திராவிடர்க்கும், சாதி இந்துக்களுக்கும் அங்கு நிலவிய பூசலை நீக்கிட, முத்தன் என்ற தாழ்த்தப்பட்டோன் கரத்தைப் பற்றி, சாதி இந்து ஒருவரது கரத்தோடு சேர்த்தார். "நான் சென்றபிறகும் இவர்களை பயமுறுத்தக் கூடாது" என்று சத்தியம் வாங்கினார். பிறகு அங்கேயே தயிர் அருந்தினாராம். சாதி இந்துக்களை நோக்கிக்கேட்டாராம்: "இந்த அரிசன சகோதரனைத் தீண்டிவிட்டு இப்போது நான் சாப்பிட்டேன், நான் நரகத்திற்குப்போவேன்; நீங்கள் மட்டும் சொர்க்கத்தில் சுகமாக இருப்போம் என்று எண்ணுகிறீர்களா?" என்று.

பெரியார் விநோபாவின் இந்தப் பேச்சையும், செயலையும் நாம் மனமுவந்து ஒப்புகிறோம். பாராட்டுகிறோம். இந்துமதத்தின் சொத்தான தீண்டாமை யெனும் இழிவைப் போக்குவதிலே பகுத்தறிவு இயக்கத்திற்குப் பெரும்பங்கு உண்டு. தீண்டாமைக்கு எதிராக மனப்புரட்சியை மலரவிட்டு கல்லடியும், சொல்லடியும் பெற்றவர்கள், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுயமரியாதைக்காரர்களே ஆவார்கள்.

பார்ப்பானையும், பறையனையும் ஒன்றாக்க விரும்புகிறவன்; வேத நிந்தகன், சாஸ்திர விரோதி, சம்பிரதாயப் பகைவன், கடவுளை மறுக்கும் கயவன் என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசினார்கள்; இடையூறுகள் பல செய்தார்கள்; அடி, உதை, குத்துக்களைப் பரிசாகத் தந்தனர் அண்டு மதவெறிகொண்ட ஆத்திக மணிகள்! அத்தனையும் சமாளித்துக்கொண்டு நாம் கூறினோம்: "தீண்டாமை இருக்க வேண்டும் என்று வேதம் கூறினால் அதனை அழிப்போம்; சாஸ்திரம் சாற்றினால் எரிப்போம்; சம்பிரதாயம் இருந்தால் சாய்ப்போம்; கடவுள் குறுக்கிட்டால் மாய்ப்போம்" என்று. அன்று நாத்திகர் என்றார்கள்; இன்றும் சொல்லுகிறார்கள்.

அன்னாளில் தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட காந்தியார், இந்துமதத்தைக் காப்பாற்றும் கடமையை மேற்கொண்டு, தீண்டாமை வளர்வதற்கான ஆதாரங்களை வாழவிட்டு, தீண்டாமையைமட்டும் ஒழிக்க முனைந்தார்; பயனற்ற பணி என்றோம். அவர் வழியினைப் பின்பற்றி காங்கிரஸ் ஆளவந்தார்கள் சட்டங்கள் பல செய்தார்கள்; ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்டம் நடந்தது. கண்ட பலன் என்ன? ஒழிந்ததா தீண்டாமை? தீர்ந்ததா வேற்றுமை நோய்? சாய்ந்ததா சாதிபேதம்? சமரசம் தழைத்ததா கிராமங்களில்? ஏன் இல்லை? ஏன்? ஏன?

பூணூலையும், உச்சிக் குடுமியையும் வாழ்த்திக்கொண்டு பார்ப்பனீயத்தை ஒழிக்க முடியாது. ராமநவமி விழாக்கொண்டாடி மதப்பூசலை மாய்க்க முடியாது. பகவத்கீதையை பாராயணம் செய்துகொண்டு பகுத்தறிவு சமதர்மம் வளர்க்க முடியாது என்பதை, தீண்டாமை ஒழிக்க விரும்பும் தீரர் விநோபாவுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். சிந்திக்க மறுத்திடும் சிறுமதியாளரல்லவே! சிந்திப்பாரா இதுபற்றி? ●●

# மறைந்திட்ட மாவீரன்.



"திராவிடம் பிரிந்ததும், முதல் கவர்னர் ஜெனரல்" என்று பெரியார் சாமியைப் பாராட்டினார். திராவிடம் பிரியு முன்பே, நம்மைவிட்டுப் பிரிந்தாரே! பெரியாரும் இலட்சியத்தை மறந்தாரே!

ஐயகோ! நெஞ்சொடிக்கும் அமரச் செய்திகேட்டோம்! வேதனைப் புயலில் சிக்கினோம்! தென் பாண்டி வீரன், பாண்டியனார் வழித்தோன்றல்; திராவிடத்தின் விடுதலைப்பணி முதல்வன், தன்மான இயக்கத்துத் தமிழ் மறவன், தூத்துக்குடி கே. வி. கே. சாமி தூர்த்தனால் கொல்லப்பட்டார்! எண்ணக் கலங்குகிறது இதயம்! எழுத நடுங்குகின்றது கை! அந்தோ! அண்ணா வென்றழைத்து அன்புமொழிபேசிடும் செயல்வீரனை—சிங்க ஏறினை இனி என்று காண்போம்! "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைக்கோர் எடுத்துக்காட்டாக—ஆற்றல்மிக்க குணக்குன்றாக—பொதுவாழ்வின் பண்பறிந்தவீரனாக—பகுத்தறிவின் முழக்கமாக—பாட்டாளிகளின் தலைவனாக—கழகத்தின் காவலனாக விளங்கிய கர்மவீரன், ஐயகோ வீழ்த்தப்பட்டான்; தேம்புகின்ற திராவிடமே! நினது விடுதலைக்காகப் போராடிய மாவீரன் ஒருவன் மடிந்திட்டான்! எமது வீர வணக்கத்தை, சவமாகிவிட்ட எங்கள் சகோதரன், தூத்துக்குடி சாமியின் பாதங்களிலே படைக்கின்றோம்! அன்னாரின் குடும்பத்தினர்க்கு வழிகின்ற கண்ணீரோடு அமைதி கூறுகின்றோம்; ஆறாத் துயரிலே பங்கு கொள்ளுகின்றோம்.

—ப. கண்ணன்.

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

## சேலத்தில் துக்கம்.

தூத்துக்குடி மாவீரன் கே. வி. கே. சாமியின் கோரமரணம் கேட்டு, சேலத்துக் கழகத் தோழர்கள் கொதிப்படைந்தனர். பெருங் கவலையுற்றனர். சேலம் நகர தி. மு. க. சார்பில் 23—9—56. ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு பெருந்த அனுதாப ஊர்வலம் நடைபெற்றது. கருப்புச் சின்னமணிந்த 1000-க்கு மேற்பட்ட தோழர்கள் அமைதியாகச் சென்ற காட்சி, பார்த்தோரின் நெஞ்சை உருக்கிற்று

ஏற்பாடு செய்திருந்த குமாரசாமிப்பட்டி, தி. மு. க. கிளையின் ஆண்டு விழாக் கூட்டம் நடைபெறும் இடம் வந்து ஊர்வலம் முடிந்தது. தோழர், எஸ். மெய்யப்பன் தலைமையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது. பிறகு தோழர், வெ பெரியசாமி தலைமையில நடைபெற்ற ஆண்டுவிழாக் கூட்டத்தில் கல்லூரி மாணவர் பெரியசாமி, கவுன்சிலர்கள் பி. கே. வரதராசுலு, வ. மாரியப்பன் ஆகியோரும், பி என். அம்மச்சி ப. கண்ணன், ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-சுப்ரமணியம ஆகியோரும் திராவிட விடுதலைப் போராட்டம் குறித்தும், மாவீரன் சாமியின் தியாகம் குறித்துப் பேசினர். —நி-நி

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● கு. இரா. பரமசிவம்,
தெற்குரத வீதி,
காரமடை.

**மு. முருகேசன், கம்பம்.**

*கே: கலையுலகில் நடமாடும் பச்சோந்திகள் பற்றித் தங்கள் கருத்தென்ன?*

கே: அவர்களின் தகுதி—தரத்தினை உணரும் சக்தி, கலாரசிகர்களிடம் வளரவேண்டும் என்பதுதான்.

**மா. அரங்கசாமி, கோவை,**

*கே: எல்லாவித பாசங்களையும் அடக்குபவர்கள், எந்தப் பாசத்தை அடக்க முடியாமல் தவிக்கிறார்கள்?*

ப: எல்லாப் பாசங்களையும் அடக்கும் வன்மை பெற்றவர்கள், எந்தப் பாசத்தையும் அடக்கிடுவார்களே!

* * *

*கே: வருகிற பொதுத் தேர்தல் ஜுரம், எத்தனை டிகிரியாக அதிகரித்து உள்ளது?*

ப: காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தவிர, மற்றவர்க்கு "நார்மல்"தான் நிற்கிறது.

**● கு. இரா. பரமசிவம், காரமடை.**

*கே: "மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்!" என்ற குறளின் கருத்துக்கும், "வாழ்வு நிலையாதே—நீ மயங்கித் திரியாதே" என்ற மதவாதியின் கருத்துக்கும் வித்தியாசம் என்ன?*

ப: இவ்வுலகில் வாழ அனுமதிப்பது குறள். "அவ்வுலக" ஆசையினை எழுப்பி வாழ்வைக் குலைப்பது மதம்! ஒன்று பசும் பால்; மற்றொன்று எருக்கம் பால்.

* * *

*கே: புராணங்களைச் சாடுவோர் மீது, முத்துராமலிங்கத் தேவர் ஏன் சீறி விழுகிறார்?*

ப: கண்ணொளி மங்கியிருக்கலாம்; அதனால் கண்டிக்கப்பட வேண்டியவர்களை அடையாளம் புரிந்து கொள்ளாமல் பாவம், அவர் எங்கெங்கோ மோதிக் கொள்கிறார்.

**எம். சுப்பராமன், சென்னை 1**

*கே: மாடர்ன் தியேட்டரின் "பாசவலை" படத்தில், தோழர் டி. வி. நாராயணசாமி ஒப்பந்தம் செய்யப்பட்டு பிறகு நடிக்க மறுத்துவிட்டது உண்மையா?*

ப: அப்படி ஒன்று நடந்ததாக நண்பர் நாராயணசாமியே ஒப்பமாட்டார். அவ்வளவு பொய்.

* * *

*கே: "பாசவலை"யில், மாயாஜால மந்திர தந்திரக் காட்சிகள் உண்டா?*

ப: எது இருக்கிறது எது இல்லை என்பது, படத்தைப் பார்த்த பிறகுதான் தெரியும்.

**கே. தருமன், கடலூர்**

*மந்திரி சுப்ரமணியம் முதன் மந்திரியாகவும், காமராசர் நிதி மந்திரியாகவும் இருந்திருந்தால்......?*

கே: கட்டாய இந்தி வேண்டாம் என்று கூறிட, ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிமான தொகை பெற்றிட முடியாமல், அப்போதும் இப்படித்தான் விழிப்பார்கள்!

**கடல்வேந்தன், தாரமங்கலம்.**

*கே; திராவிடம் பிரிந்தால், கம்யூனிஸ்டுகள் தேவைப்படுவார்களா?*

ப: சமதர்மக் குடியரசு வெற்றிபெற அவர்கள் ஒத்துழைத்தால், வரவேற்கத் தானே வேண்டும்!

**ஏ மாணிக்கம், துளசம்பட்டி.**

*கே: நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திறவுகோல் எது அண்ணா?*

ப: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்பு நிறைந்த உழைப்பு, தம்பி!

---

தலைமை நிலையச் செய்தி:

## தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப் பயணம்.

——::——

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத்து, ஏ வி பி ஆசைத்தம்பி, என். வி நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து, 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

**ஊர்கள்:**

**காஞ்சீபுரம், வேலூர் (வ ஆ) திருப்பத்தூர், கிருஷ்ணகிரி சேலம், ஈரோடு, கோயமுத்தூர், உடுமலைப்பேட்டை, கரூர், திருச்சி, பெரியகுளம், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, நாகர்கோவில், குற்றாலம், காரைக்குடி, பட்டுக்கோட்டை, மாயவரம், கடலூர்.**

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக் கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ளவர்களைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்பு கூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக்கழகம் (தி.மு.க)

'அறிவகம்' சென்னை 20-9-56

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒவ்வொரு துறைக்குமாகச் செலவிடப் போகும் தொகையைப்பற்றிய பட்டியல் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அதில் காணப்படும் தொகை விவரம் எவ்வளவு தெரியுமா? 184 கோடியே 66 லட்சம் ரூபாயாகும். இப்புத்தகம் அச்சாகி அங்காடிக்கு வருவதற்குள் 14 கோடி ரூபாயைக் கோட்டை விட்டிருக்கிறார்கள்! தேவிகுளம், பீர்மேட்டைக் காப்பாற்றப்போய் செங்கோட்டையையும் பறிகொடுத்த வீரத்திற்கு இழுக்கு நேரலாமா? எனவே, விட்டுக் கொடுப்பதையே தம் பணியாகக் கொண்டிருக்கிறான் நம் கந்தப்பிள்ளை. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளராதோ என்பது அவன் சித்தாந்தம்!

82 கோடியை நிறுத்தி நிதானமாக ஐந்து ஆண்டுகளில் செலவழித்திருக்கிறதே, அதையேனும் ஒழுங்காகச் செலவு செய்திருக்கிறதா என்றால் அதுவுமில்லை! ஒருசில சிக்கல்களை உங்கள் முன் வைக்கிறேன். விடை கண்டுபிடிக்க முடியுமா என்று முயலுங்கள்:

'வழவழா' என்று படங்கள் நிறைந்து கவர்ச்சியோடு கூடிய ஒரு நூல், தொடுவதற்கு நன்றாக இருக்கிறது! ஆங்கிலத்தில் எழுதப்பட்டு உள்ளது. "சென்னை மாநிலத்தில் பாசனம்" (Irrigation in Madras State) என்னும் தலைப்பில் 1955-ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது "ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை" என்ற தமிழ் நூலும் அதே ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டிலும் குறிப்பிட்ட சில தேக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை, ஒன்றோடொன்று உதைத்துக் கொள்கிறது. அதற்குள் கொஞ்சமும் ஒற்றுமையைக் காணோம்! இதை யாரிடம் சொல்லி அழுவது? இரண்டும் அரசாங்க வெளியீடுகள்! ஒரேயாண்டில் வெளியிடப்பட்டவை!

மணிமுத்தாறு தேக்கச் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 398 லட்சம், இன்னொன்றிலே 500 லட்சம்! வைகை நீர்த்தேக்கத் திட்டத்தின் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 243 லட்சம், பிறிதொன்றிலோ 310 லட்சம்! சாத்தனூர் தேக்கத்திட்டம் 263 லட்சத்தைச் சாப்பிடும் என்று எண்ணப்பட்டது ஒரு ஏட்டில். ஏனைய ஒன்றில் அதன் செலவீடு 289-ஆக உயர்ந்துள்ளது! இவை இரண்டு நூல்களும் இப்படி முட்டிக்கொள்வது போதாதென்று "முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்" என இந்த ஆண்டிலே வெளியிடப்பட்டிருக்கும் நூலும் இவற்றை இடிக்க வருகிறது. இதன்படி மணிமுத்தாறு நீர்த்தேக்கச் செலவு ஐந்துகோடியே ஐந்து லட்சம்! ஓராண்டில் ஐந்து லட்சமேனும் உயரவேண்டாமா? வைகைத் தேக்கம் இன்னும் சற்று முன்னோக்கிப் பாய்கிறது. இந்நூலின் கணக்குப்படி வைகைத் திட்டத்தின் செலவு மதிப்பீடு மூன்று கோடியே முப்பது லட்சம்! ஒரே ஆண்டில் இருபது லட்சம் எகிறியுள்ளது! இதன்முன் மணிமுத்தாறு கண்ணைக் கவ்வுகிறது. 5 லட்சந்தானே அதனால் உயர முடிந்தது? வைகையைப் பாருங்கள், 20 லட்சம் எட்டிக் குதித்துள்ளது! எப்படி நமது நிர்வாகம்?

இதைவிட மோசமாம் வடக்கே. இந்திய அரசின் மாட்சிமையைக் கற்பனை செய்து பார்க்கக்கூட ஒருவராலும் இயலாது. மலையினும் மாணப் பெரிது!

உயர்வெல்லாம் செலவிலே மட்டும்தான். வரவிலேயல்ல. செலவினம் உயர்ந்திருப்பதுபோல் (ஏன் உயர்ந்தது என்று ஒருவருக்குமே தெரியாது போலும்!) நீர்பாயும் பரப்பு அதிகரிக்கவில்லை. ஆனால், இதற்கு மாறாகச் செலவு மதிப்பீட்டுக் காலத்தில் இவ்வளவு பாயும் எனத் திட்டமிடப்பட்டிருந்த பவானித் தேக்கம், அத்தனை ஏக்கருக்கும் நீர் தருவதாக இல்லை. செப்டம்பர் 15-ம் தேதிக்குப் பிறகு கீழ்பவானித் தேக்கம் மட்டும், சுமார் 1 லட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்வசதியளிக்கும்—இது 'இந்து' ஏடு தரும் செய்தி. இந்தமாதம் முதல்வாரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். (தேதியை நான் குறித்து வைக்கவில்லை) ஆனால் இத்தேக்கம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சும் என்று எதிர்பார்க்கப்பட்டது! ஆர்ப்பரிப்பதைக் கண்டு மயங்காது சிந்தித்தால் அனைவருக்கும் நன்மையுண்டு.

---

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-ச.

அதிகாரம்-க. பாட்டு-ச.

வேண்டுதல் வேண்டாமை
 -இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

எதிலும் விருப்பமும், வெறுத்தலுங் காட்டாது; யாவையும் சமநோக்குடன் கருதி வாழ்கின்றவருக்கு எவ்விதத் துன்பங்களும் உண்டாவதில்லை. துன்பங்கள் எல்லாம் ஆசையாலும், அகங்காரத்தாலுமே விளைவதாகும். அவை அகற்றப்பட்டு விட்டால் துன்பமில்லையாம்.

விளக்கம்:

"இலான் அடி" என்பது அறிவை "ஆன்" விகுதி கொடுத்துளது சிறப்பு கருதி.

—மீ சு. இளமுருகு பொற்செல்வி

---


## தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

மு. கருணாநிதியின்

ஒரே முத்தம் 1—4—0

ப. கண்ணனின்

புரட்சிப் பாடகன் 1—8—0

வீரவாலி 1—4—0

கன்னியின் சபதம் 0—8—0

மின்னொளி 0—6—0

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,

சலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

என்று கூறுகின்றனர்—'ஏக இந்தியா' பேசுகின்றனர்!

ஆனல், கொடும் புலிகூட அவவிதம் கேட்காது—வடவர் கேட்கின்றனர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் அதிகாரம் செலுத்திவந்த வெள்ளையரை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்ற அனைவருமே கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயினர்; இன்னும் சொல்லப்போனல் தென்னாட்டு மக்கள்தான் தீவிரக் கிளர்ச்சிகளில் முன் நின்றனர். ஆனல், இன்று வடநாட்டினர் ஏக போக உரிமை கொண்டாடுகின்றனர்.

வெள்ளையர் ஆட்சி கொடுமையானதென்ருல், வடவர்கள் ஆட்சி, கொடுமையும் வஞ்சகமும் நிறைந்ததென, நம் நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே தங்களையும் மறந்து சில நேரங்களில் உண்மை பேசுவதை நாம் கண்டு வருகிருேம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டால்கூட மக்கள் எண்ணிக்கைப்படி குறைந்தது 700 கோடி ரூபாயாவது ஒதுக்கியிருக்க வேண்டும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்காரின் வஞ்சனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நம் நாட்டுக்கு 1,000 கோடி ரூபாயாவது ஒதுக்கிப் பெருந் தொழிற்சாலைகள், அணைக்கட்டுத் திட்டங்கள் அமைக்க முன்வந்திருக்கவேண்டும். நேரு பண்டிதர் செய்ததென்ன? 170 கோடி ரூபாய்தான் தர முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்"

●

## கலைக்கூடம்

### தாய்க்குப்பின் தாரம்.

சொல்லும் முறை தெரிந்து சொன்னல் அது சிறிய விஷயமாயினும் சோபிதமளிக்கும் என்ற கருத்துக்கு எடுத்துக் காட்டாக விளக்குகிறது "தாய்க்குப்பின் தாரம்!"

அகந்தையும், ஆணவமும் கொண்ட பண்ணையார் துரைசாமி துறையூர் கிராமத்திற்கு ஒரு சர்வாதிகாரி! அவர் அதிகாரத்திற்குப் பணிய மறுக்கின்றனர் ரத்தினம்பிள்ளையும் அவன் மகன் முத்தையனும்! பண்ணையார் அதிகார வெறி ரத்தினம்பிள்ளையை பலி கொள்ளுகிறது! முத்தையன் மனதில் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற பகை வளர்கிறது. அதற்கு உரமிடுகிறாள் முத்தையனுடைய அன்னை. இடையிலே பண்ணையார் மகள் சிவகாமி முத்தையன் இருவரும் காதலில் இணைகின்றனர். முடிவிலே முரட்டுக்காளையால் சிவகாமிக்கு நேரவிருந்த பேராபத்திலிருந்து அவளைக் காப்பாற்றி, துரைசாமியின் ஆணவத்தை முறியடித்து, தன் தாய்க்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி தன் சபதத்தை முடித்து சிவகாமியை மணக்கிருன் முத்தையன்!

கதையில் பிரமாதமான கருத்துக் குவியலோ, கற்பனைப் பின்னலோ, கதையம்சமோ இல்லை! என்ருலும் ஆர்வத்துடன் ரசிக்கச் செய்கின்றன கதையை விவரித்திருக்கும் முறையும், காட்சிகளைப் படமாக்கி இருக்கும் கற்பனைத் திறமையும்!

முரட்டுக் காளையுடன் முத்தையன் போராடும் கட்டம் கதையின் உச்சம்! பண்ணையாரின் உயிரை வாங்கிவிடுவதென்று ஓடிய முத்தையன் அவர் கன்னத்தில் மட்டும் அறைந்துவிட்டு ஓடுவது அவன் வீரத்திற்கு ஒரு இழுக்கு!

சில காட்சிகள் மனோகரா, பொன்முடி, காலம் மாறிப்போச்சு போன்ற வெற்றிப் படங்களை நமக்கு நினைவூட்டுகின்றன!

முத்தையன் தந்தை இறந்து விட்டதைக் கேட்டுக் கதறுவதும், தாயைக் கட்டிக்கொண்டு அழுவதும் உணர்ச்சிகரமாக இருந்தாலும், மிகைபடக் காணப்படுவதால் சலிப்பாக இருக்கிறது!

வள்ளியாக வரும் ஜி. சகுந்தலா மற்றப் படங்களில் நடித்ததைவிட இதில் நன்ருக நடிக்கிருர்.

ச. அய்யா(பிள்ளை)வின் வசனங்கள் நன்ருக இருக்கின்றன. பகுத்தறிவுக் கருத்துக்களும் தெறிக்கின்றன. திரையுலகின் பின்னல் மறைந்து நின்றவர், முன்னல் வந்தார்; வெற்றிபெற்று விட்டார். வாழ்க!

மருதகாசியின் "மனுசனை மனுசன் சாப்பிடுராண்டா தம்பிப் பயலே!" என்ற ஒரு பாட்டைத் தவிர மற்ற பாடல்கள் சோபிக்கவில்லை!

படத்தை விருவிருப்புடன் கொண்டு செல்வது 'எடிடிங்!' இதைச் செய்தவர் எம். ஏ. திருமுகம்! டைரக்டரும் இவரே. டைரக்ஷனில் புதுமை இல்லாவிட்டாலும் சோடை இல்லை!

மக்களின் ஆரவாரத்தையும், கைதட்டலையும் கொண்டு ஒரு படத்தின் வெற்றியை நிர்ணயிப்பதானல் "தாய்க்குப் பின் தார"த்தை ஒரு வெற்றிப் படமென்றே கூறலாம்!

—"அமரன்"


டாக்டர் சோதனை விளக்கத்தின்படி
ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்—1.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.